**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.89/2019**

| | |
|---|---|
| **NAME** | **:** சொக்கலிங்கம் |
| **FATHER NAME** | **:** |
| **VILLAGE** | **:** |
| **TALUK** | **:** |
| **CALLING** | **:** |
| **RELIGION** | **:** |
| **AGE** | **:** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 21.06.2023.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் போட்ட வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எழுதப்பட்ட இடத்தை நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சொல்லியுள்ளேன். பாண்டு பூர்த்தி செய்யப்பட்ட பாண்டு என்ற விவரத்தை நான் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. கடன் ஐந்து முறை கொடுத்ததாக வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். பாண்டில் சாட்சி கையொப்பம் போட்ட நபர்களை அதற்கு முன்பாக தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் எல்லாருமே நண்பர்கள். நண்பர்கள் என்ற முறையில் தெரியும். வேறு வகையில் அவர்களை தெரியாது. பூபதி, ஆர்.முருகேசன், முருகன் என்பவர்கள் என்னுடன் பணிபுரிந்தார்கள். கோபி, விஜயன் என்னுடைய நண்பர்கள். நண்பர்கள் என்பதால் சாட்சி கையொப்பம் போட்டார்களா என்றால் கடன் வாங்கியவர் ஒவ்வொரு முறையும் அவர்களை அழைத்து வந்தார். நான் அழைத்து வந்து சாட்சி கையொப்பம் போட்டதாக சொன்னால் அது தவறு. சாட்சிகள் யாரும் பிரதிவாதிக்கு பழக்கமானவர்கள் கிடையாது என்றாலும் அவர்களை பிரதிவாதி அழைத்துவரவில்லை என்றாலும் தவறு. என்னிடம் காண்பிக்கப்படும் ஒரே மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரே நபர்தான் அதை பூர்த்தி செய்துள்ளார் என்றால் சரி. வேறு வேறு நாட்களில் எழுதப்பட்டது. பணம் கொடுக்கும்போது என் மனைவி பார்த்தார்கள். மனைவி மட்டும் இருந்தார்கள், பிள்ளைகள் அங்கு இல்லை. பிரதிவாதி பைசல் செய்த பாண்டுகளை பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார். 20 வருடமாக

கொடுத்துவருகிறேன். எவ்வளவு கொடுத்தேன் என ஞாபகம் இல்லை. தோராயமாக ரூ.20 லட்சம் இருக்கும். எந்த வருடத்திலிருந்து என்னால் சொல்ல முடியாது. அவர் வாங்கிய கடனை நாணயமாக பைசல் செய்துள்ளார் என்றால் ஆமாம். கடன் வேண்டும் என்று போனில்தான் கேட்டார். ஐந்து கடன்களையுமே போனில்தான் கேட்டார். போனில் கேட்ட அன்றேயும் கொடுத்திருக்கிறேன், மறுநாளும் கொடுத்திருக்கிறேன். பணத்தை கையில்தான் வைத்திருப்பேன், வங்கியில் எடுத்து கொடுக்கவில்லை. எனக்கு பாரத ஸ்டேட் வங்கி குடியாத்தத்திலும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மொரசபள்ளி கிளையிலும் மற்றும் ஆக்சிஸ் வங்கி, பெடரல் வங்கி குடியாத்தம் ஆகியவற்றில் நான் வங்கி கணக்கு வைத்துள்ளேன். நான் வங்கியிலிருந்து பிரதிவாதிக்கு பணம் கடன் கொடுப்பதற்காக வித்டிரா செய்யவில்லை என்றால் சரி. எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை நான் நோட்டீசில் சொல்லவில்லை என்றால் தெரியாது. நான் பிரதிவாதிக்கு எல்லா நாட்களிலும் பணம் கொடுப்பேன். பிரதிவாதியின் மாத வருமானம் சம்பந்தமாக நான் ரெக்கார்ட் எதுவும் பார்க்கவில்லை. ஐந்து பாண்டுகள் முன்னிலைக்கு பிரதிவாதி எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும் ஏற்கெனவே கடன் வாங்கி பைசல் செய்திருந்த பாண்டுகளை பார்த்து நாங்களாகவே இந்த ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகனும், மனைவியும் பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். நான் சொல்லித்தான் அவர்கள் பணத்தை கொடுத்தார்கள். நான் இருக்கும்போதுதான் பணத்தை கொடுத்தார்கள். என் மனைவியும், மகனும் பணம் கொடுத்தது சம்பந்தமான ஆவணங்களில் நான் எந்த கையொப்பமும் போடவில்லை. நான் சொல்கிறமாதிரி பிரதிபலன் எதுவும் ஐந்து பாண்டுகள் முன்னிலைக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த பாண்டுகளை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.